# கிருஷ்ணகிரி
# மாவட்டக் கல்வெட்டுகள்


பொதுப் பதிப்பாசிரியர்

முனைவர் **சீதாரா்ம் குருமூர்த்தி** இ.ஆ.ப.

முதன்மை ஆணையர்

பதிப்பாசிரியர்கள்

**முனைவர் சு. இராசகோபால்**

**திரு. ச. கிருஷ்ணமூர்த்தி**



*வெளியீடு*

**தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை**

சென்னை – 600 008

2007

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title | : | **Krishnagiri Mavatta Kalvettukal** |
| Editor | : | Principal Commissinor |
| Copy Right | : | T.N. State Dept. of Archaeology |
| Subject | : | History |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Publication No. | : | 181 |
| Year | : | 2007 |
| Type Point | : | 12 |
| No.of. Pages | : | 288 |
| Paper Used | : | 80 Gsm Maplitho |
| Type Setter | : | **Cavin Laser Printers**<br>19/9, Devaraja Mudhali Street,<br>Chennai - 600 005.<br>Phone: 9940351234. |
| Printer | : | **The Chennai Printers' Industrial Co-op. Society Ltd.,**<br>118, Big Street, Triplicane,<br>Chennai - 5. P h: 28446287 |
| Publisher | : | **State Dept. of Archaeology,**<br>Tamil Valarchi Valagam,<br>Halls Road, Egmore,<br>Chennai - 600 008. |
| Price | : | **Rs.** 137/- |



TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY * MADRAS
LIBRARY,
Acc No 1094
Date ----
417.7

# பதிப்புரை

தமிழகத்தின் வடபகுதியில் ஆந்திர, கருநாடக மாநில எல்லைகளை ஒட்டி அமைந்த மாவட்டம் கிருஷ்ணகிரி மாவட்டம். இம்மாவட்டம் தருமபுரி மாவட்டத்திலிருந்து 2004 இல் பிரிக்கப்பட்டுப் புதிதாக உருவாக்கப்பட்டது. பிரிக்கப்படாத தருமபுரி மாவட்டத்தில் 1971 முதல் 1976 முடிய ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியம் வாரியாகக் கிராமங்கள் கள ஆய்வு செய்யப்பட்டுக் கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டன. அதன் பின்னர் மீண்டும் முனைப்புத் திட்டத்தின் கீழ் விடுபட்ட சில கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டன. படியெடுக்கப்பட்ட கல்வெட்டுகளில் ஒரு பகுதி தருமபுரி மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி 1 என்ற தலைப்பில் முன்னர் வெளியிடப்பட்டது.

வெளியிடப்படாத எஞ்சிய கல்வெட்டுகள் தற்பொழுது கிருஷ்ணகிரி மாவட்டக் கல்வெட்டுகள் என்ற தலைப்பில் வெளியிடப்படுகின்றன. எனினும் பின்பகுதியில் வெளியிடப்படாத இன்றைய தருமபுரி மாவட்டக் கல்வெட்டுகளும் சேர்க்கப்பட்டுள்ளன. இன்னும் சில கல்வெட்டுகள் மீள் வாசிப்பு செய்ய வேண்டியுள்ளன.

குன்றுகளும், காடுகளும் நிறைந்த இப்பகுதியில் கடினமான கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு படியெடுக்கப்பட்ட கல்வெட்டுகளின் பதிப்புப் பணி இத்துறை மேனாள் இயக்குநர் முனைவர் இரா. நாகசாமி தலைமையில் திரு. க. குழந்தைவேலன் கல்வெட்டாய்வாளர் மற்றும் பிற கல்வெட்டாய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்டது.

எனக்கு முன் இத்துறை ஆணையராக இருந்த திரு. தி.ஸ்ரீ. ஸ்ரீதர். இ.ஆ.ப. அமைத்த நிரல்படி தற்பொழுது மீள் பதிப்புப் பணி முனைவர். சு. இராசகோபால், கல்வெட்டாய்வாளர், திரு. ச. கிருஷ்ணமூர்த்தி, தொல்லியல் அலுவலர் ஆகியோரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. முனைப்புத் திட்டத்தின் கீழ் இப்பகுதியில் எஞ்சிய கல்வெட்டுகள் திரு. ச. செல்வராஜ். தொல்லியல் அலுவலர், திரு. மா. கலைவாணன், காப்பாட்சியர் ஆகியோரால் படியெடுக்கப்பட்டுப் படிக்கப்பட்டன. கிரந்த எழுத்துக்கள் சேர்ப்பு, சொல்லடைவு ஆகியவை திரு.க.

ஈஸ்வரன், திரு. கு.குமரவேல், திரு.ஆர்.கே. சேட்டு, திரு. பொ.கோ. லோகநாதன் ஆகியோரால் மேற்கொள்ளப்பட்டன. இவர்களுக்கு எனது பாராட்டுக்கள்.

இத்தொகுதியில் பயன்படுத்தப்பட்டுள்ள கிரந்த எழுத்துக்கள் சென்னை ஐ.ஐ.டி. பேராசிரியர் முனைவர். கல்யாண கிருஷ்ணன் அவர்களாலும் தமிழ் எண்கள் மற்றும் குறியீடுகள் தமிழ் இணையம் வழியாகப் புலவர். திரு. கண்ணையன் அவர்களாலும் வழங்கப்பட்டவை. அவர்களுக்கு எனது நன்றி.

பல்லவர் காலம் தொடங்கி ஆங்கிலேயர் காலம் வரையிலான இப்பகுதியில் உள்ள கல்வெட்டுகள் தனிச் சிறப்புடையவை. எல்லைப்புறச் சிற்றரசர்களான கங்கர், நுளம்பர், அதியர் எனப் பலருடைய கல்வெட்டுகளும் கோயில், பாறை மற்றும் நடுகல் கல்வெட்டுகளும் இத்தொகுதியில் உள்ளன. இத்தொகுதி வரலாற்று ஆய்வாளர்களுக்குப் பல்வகையிலும் பயன்படக் கூடியது. இதனைத் தொல்லியளார் பெரிதும் வரவேற்பர் என்று கருதுகின்றேன்.

தொல்லியல் ஆய்வினை வளப்படுத்த நிதி ஒதுக்கீடு செய்து பல்வகையிலும் ஊக்கம் தரும் தமிழ்நாடு அரசிற்கு எனது மனமார்ந்த நன்றி.

சென்னை-8 **சீதாராம் குருமூர்த்தி**

27.03.2007 முதன்மை ஆணையர்.

# பொருளடக்கம்


| | |
|---|---|
| பதிப்புரை | |
| முன்னுரை | i |
| **கிருஷ்ணகிரி மாவட்டக் கல்வெட்டுகள்** | |
| அச்சேந்திரம் | 1 |
| அனுசோனை | 5 |
| இருமத்தூர் | 6 |
| இளவம்பாடி | 7 |
| ஒசூர் | 8 |
| கங்கதேவன்பள்ளி | 10 |
| கங்காவரம் | 13 |
| காத்தாடி குப்பம் | 16 |
| காரக்குப்பம் | 18 |
| குட்லட்டி | 19 |
| குப்பம் | 20 |
| குருவிநாயனபள்ளி | 21 |
| சந்தூர் | 23 |
| சப்பானிப்பட்டி. அ | 33 |
| சின்னகொத்தூர் | 34 |
| சென்னசமுத்திரம் | 48 |
| தட்டக்கல் | 49 |
| திம்மாபுரம் | 51 |
| தீர்த்தம் | 54 |
| நரிமேடு | 63 |
| நெடுங்கல் | 65 |
| நெடுசால் | 66 |
| நொகனூர் | 81 |
| பாரூர் | 82 |

| | |
|---|---|
| பெண்ணேஸ்வரமடம் | 86 |
| பேரிகை | 123 |
| பையூர் | 128 |
| பொன்னேரி | 129 |
| போச்சம்பள்ளி | 131 |
| மகாராஜாகடை | 132 |
| மட்டியூர் | 134 |
| மனேகல் | 135 |
| மிடுதேபள்ளி | 136 |
| மிண்டகிரி | 138 |
| முச்சந்திரம் | 139 |
| மேகல சின்னம்பள்ளி | 140 |
| மோட்டுக்கொளத்தான் கொட்டாய் | 142 |
| மோட்டூர் | 143 |
| வறட்டனபள்ளி | 145 |
| விடாமங்கலம் | 146 |
| முழுவன பள்ளி | 148 |

**தர்மபுரி மாவட்டக் கல்வெட்டுகள்**

| | |
|---|---|
| அகரம் | 149 |
| அத்திமோட்டுலு | 150 |
| அதியமான்கோட்டை | 153 |
| அமானி மல்லாபுரம் | 162 |
| அனுமந்தபுரம் | 163 |
| ஆதனூர் | 164 |
| இண்டூர் | 167 |
| இலளிகம் | 170 |
| ஏற்ற சீரனவறள்ளி | 171 |
| கடகத்தூர் | 174 |
| காரிமங்கலம் | 183 |
| கானம்பாடி | 186 |
| குட்டூர் | 187 |
| குண்டல நாயக்கம்பட்டி | 191 |

| | |
|---|---|
| குண்டூரப்பன் கொட்டாய் | 192 |
| குண்டல ஹள்ளி | 193 |
| குள்ளனூர் | 194 |
| கொளகத்தூர் | 195 |
| கோட்டை பைரஹல்லி | 200 |
| சிவாடி | 203 |
| சின்னம்பட்டி | 205 |
| சோமேன ஹள்ளி | 206 |
| தருமபுரி | 208 |
| பரிகம் | 221 |
| பலிஞ்சரஹள்ளி | 222 |
| பனைக்குளம் | 226 |
| பாப்பாரப்பட்டி | 227 |
| பால்வாடி | 234 |
| பூச்செட்டிபள்ளி | 236 |
| பேகார ஹல்லி | 237 |
| பையூர் | 240 |
| மாரண்ட ஹள்ளி | 241 |
| மான்காரன்கொட்டாய் | 243 |
| முள்ளானூர் | 244 |
| மூக்க நாயக்கன்பட்டி | 245 |
| மூக்கனூர் | 246 |
| மோதூர் | 249 |
| வேட்டம் பட்டி | 250 |

# முன்னுரை

தமிழகத்தில், குன்றுகளும் காடுகளும் அவற்றினிடையே சிற்றூர்களும் நிறைந்த மாவட்டங்களில் ஒன்று கிருஷ்ணகிரி மாவட்டம். தமிழகத்தின் ஓரத்தில், ஆந்திர கருநாடக மாநில எல்லைகளை ஒட்டி அமைந்த இம்மாவட்டத்தைப் பிறமாநிலங்களுக்கானத் தமிழகப் பெருவழிகள் ஊடறுத்துச் செல்கின்றன. 1965இல் சேலம் மாவட்டத்திலிருந்து தருமபுரி மாவட்டமும் 2004இல் தருமபுரி மாவட்டத்திலிருந்து கிருஷ்ணகிரி மாவட்டமும் பிரித்து உருவாக்கப்பட்டன. இதனால் இப்பகுதிச் சிற்றூர்க்ள் ஒவ்வொன்றும் போக்குவரத்து வசதிகளும், தகவல் ஊடக வசதிகளும் மற்றும் பல அடிப்படை வசதிகளும் பெற்று இன்று விளங்குகின்றன.

இவ்வித வசதிகள் மிகக் குறைவாக இருந்த 1971-1976 ஆம் ஆண்டுகளுக்கிடையே இப்பகுதியினைத் தமிழகத் தொல்லியல் துறை கள ஆய்வு மேற்கொண்டு கல்வெட்டுகளைப் படியெடுத்தது. அன்றைய இத்துறை இயக்குநர் முனைவர் இரா. நாகசாமி அவர்கள் தலைமையில் அன்றைய கல்வெட்டாய்வாளர், அகழ்வாய்வாளர்களாக இருந்த திருவாளர்கள் நடன. காசிநாதன், கு. தாமோதரன், அ.அப்துல் மஜீத், ச.ஹரிஹரன், மா. சந்திரமூர்த்தி ஆகியோர் முதற்கட்டக் கள ஆய்வுகளை மேற்கொண்டனர். கல்வெட்டுகள் படியெடுக்கவும் படித்தறியவும்பட்டன. அவர்களுக்குப் பின் கல்வெட்டாய்வாளர், அகழ்வாய்வாளர்களாகப் பணி மேற் கொண்ட திருவாளர்கள் கி.ஸ்ரீதரன், ர.பூங்குன்றன், க.குழந்தைவேலன், சு. இராசகோபால், பொ. இராசேந்திரன், வெ.வேதாசலம், மா. செந்தில் செல்வக் குமரன் ஆகியோர் இரண்டாம் நிலைக் கள ஆய்வுகளை மேற்கொண்டு கல்வெட்டுகளைப் படியெடுத்துப் படித்தறிந்தனர். அதன் பிறகு தருமபுரி மாவட்டத் தொல்லியல் அலுவலர், காப்பாட்சியர்களாகப் பணிமேற் கொண்ட திருவாளர்கள் சொ. சாந்தலிங்கம், ச.கிருஷ்ணமூர்த்தி, ச.செல்வராஜ், தி.சுப்பிரமணியன், மா.கலைவாணன் ஆகியோர் பின்னர் அறியப்பட்ட கல்வெட்டுகளைப் படியெடுத்தனர்.

படியெடுத்துப் படிக்கபட்டவற்றில் ஒரு பகுதிக் கல்வெட்டுகள் தருமபுரி மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி - 1 ஆக வெளியிடப்பட்டது. மறுபகுதிக் கல்வெட்டுகள் தொகுதி - 2 ஆக பதிப்புப் பணி முடிக்கப்பட்டன. அவை மீள் பதிப்புச் செய்யப்பட்டு தற்பொழுது இத்தொகுதியாக வெளி வருகின்றன. எழுபத்து ஒன்பது ஊர்களில் உள்ள இக்கல்வெட்டுகளில் (219) இன்றைய கிருஷ்ணகிரி மாவட்டக் கல்வெட்டுகள் 132 உள்ளன. எனவே இத்தொகுதிக்கு கிருஷ்ணகிரி மாவட்டக் கல்வெட்டுகள் என்று பெயரிடப்பட்டுள்ளது. தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த 87 கல்வெட்டுகள் இத்தொகுதியில் இரண்டாம் பகுதியாக உள்ளன. இன்னும் மீள் வாசிப்புச் செய்ய

வேண்டிய கல்வெட்டுகளும், தெலுங்கு, கன்னடக் கல்வெட்டுகளும் உள்ளன. அவை பின்னர் வெளியிடப்பட உள்ளன. இந் நிரலினை வகுத்துப் பதிப்புப் பணியை விரைவுபடுத்தியவர்கள் இத்துறை முன்னாள் சிறப்பு ஆணையர் திரு. தி.ஸ்ரீ. ஸ்ரீதர் அவர்கள்.

மாவட்டப் பெயர்களின் மாற்றமும், வட்டங்களின் புதிய உருவாக்கமும் படியெடுத்த கல்வெட்டு ஊர்களை வகைப்படுத்துவதில் கடினத்தை உண்டாக்கியதால் இத்தொகுதியில் ஊர்களின் அகரவரிசைப் படி கிருஷ்ணகிரி, தருமபுரி என இரு பிரிவுகளில் கல்வெட்டுகள் தொகுத்து வெளியிடப்படுகின்றன. இக்கல்வெட்டுகள் கோயில்கள், நடுகற்கள், பாறைகள், செக்கு, ஏரி மடைத்தூண் என்று பரவலாகப் பல்லவர் காலம் தொடங்கி ஆங்கிலேயர் காலம் வரையிலானவை. வட்டெழுத்து, தமிழ், ஆங்கில எழுத்துக்களில் உள்ளவை. பல்லவர், சோழர், போசளர், விஜயநகரர் ஆகிய பேரரசுகளின் கல்வெட்டுகளும், கங்கர், நுளம்பர் கொங்கணி, அதியர், நாயக்கர் மற்றும் பிற சிற்றரசர்களின் கல்வெட்டுகளுமாக இவை உள்ளன.

## பல்லவர்

பல்லவர் கல்வெட்டுகள் வீரர்களின் நடுகற்களே. காணம்பட்டி (பக். 186) நடுகல் சிம்மவிஷ்ணுவின் நடுகல்லாகும். அது வதிசெலாவன் என்பவன் ஆநிரை கொள்ள ஊரினைத் தாக்கியபோது இறந்த செய்தியைச் சொல்கிறது. சந்தூர் (பக். 29) பலிஞ்சரஹள்ளி, (பக். 247) அனுமந்தபுரம் (பக்.163) ஆகியவை முறையே மகேந்திரவர்மன், ஈச்சுவர வர்மன் ஆகியோருடையவை. சந்தூர் நடுகல் மகேந்திரனின் ஏழாவது ஆண்டில் பெரும் பாண இளவரசனின் சேவகன் நையவடுகன் சாத்துழரான் ஆநிரை மீட்புப்போரில் இறந்து போன செய்தியைச் சொல்கிறது. பலிஞ்சரஹள்ளியில் மூன்று நடுகற்கள் உள்ளன. இரண்டு சிதைந்தவை. முழுமையான ஒன்று மகேந்திரவர்மனின் ஐந்தாம் ஆண்டில் காடந்தைகள் சேவகன் எருமேதி காரி புதுப்பள்ளிகளோடு பொருதிய போது இறந்து பட்டதைச் சொல்கிறது. அனுமந்தபுரம் நடுகல் இருவீரர்களுக்கு ஒரே கல்லில் அமைக்கப்பட்ட நினைவுக் கல்லாகும். இவர்கள் காடந்தைகளின் சேவகர்களான புதூர் சாத்தன் மற்றும் கட்டி கடுங்கோ என்பவர்களாகும்.

## கங்கர், கொங்கணி

கட்டாணைபருமர், புருசபருமர் ஆகியோரது நடுகற்கள் கங்கர், கொங்கணி அரசுகளைச் சேர்ந்தவை. சந்தூரில் உள்ள (பக்கம் 25-31) ஆறு கட்டாணைபருமரது நடுகற்கள் 30,35 மற்றும் 45ஆம் ஆண்டுகளைச் சேர்ந்தவையாகும். இவை இப்பகுதிப் பொறுப்பிலிருந்த பெரும்பாண இளவரசர்களது சேவகர்கள் வீர மரணம் அடைந்ததைத் தெரிவிப்பவையாகும். ஒரு நடுகல் கட்டிய விச்சன் என்ற சேவகன் புலியுடன் பொருதி இறந்ததைச் சொல்கிறது. பிற பெருமுகை, மூங்கிற்கோடு, சந்திரபுரம் ஆகிய இடங்களில் நிகழ்ந்த பூசல்களைக் குறிக்கின்றன.

இண்டூரில் கிடைத்துள்ள நடுகல் புருசவருமனுடைய 21 ஆம் ஆண்டைச் சேர்ந்தது. மாவலிவாணராயர் இப்பகுதிப் (கங்கநாடு) பொறுப்பில் இருந்ததையும் கூடல் நொடையார் மகன் ஒரு பூசலில் நான்குபேருடன் பொருதி (கலாத்து) இறந்ததையும் அந்நடுகல் குறிப்பிடுகிறது.

## சோழர்

சோழர் காலக் கல்வெட்டுகள் இருபதுக்கு மேல் இத்தொகுதியில் உள்ளன. அவை நடுகற்களும், கோயிற் கல்வெட்டுகளுமாகும். முதலாம் இராசேந்திர சோழன் (1012-1044) எனக் கருதத்தக்க இருநடுகற்கள் அனுசோனை மற்றும் கங்காவரத்தில் கிடைத்துள்ளன. அவை கோயில் நிலத்தினை உழுது கொண்டிருந்த போது புலி தாக்கி இறந்த வீரனுக்கும் மாடு மீட்டு ஊரழியப் பட்ட வீரனுக்குமாக எடுக்கப்பட்டவை. இராஜாதி இராஜனுடையவையாக (1018-1054) காத்தாடிக்குப்பம் (பக். 16) குண்டூரேப்பன் கொட்டாய் (பக். 192) தருமபுரி (பக். 214) ஆகிய இடங்களில் மூன்று கல்வெட்டுகள் உள்ளன. இவை மூன்றுமே முழுமையில்லாத கல்வெட்டுகளாகும். தருமபுரியில் உள்ள இவனது துண்டுக் கல்வெட்டு கோச்செங்கணீஸ்வரம். என்ற கோயில் இறைவனைக் குறிப்பிடுகிறது. சங்ககாலச் சோழ மன்னர்களில் சிறப்புடையவன் கோச்செங்கண்ணான். அவன் பெயரில் கோயில் ஒன்று உள்ளமை சிறப்பாகும்.

காத்தாடிக்குப்பத்தில் உள்ள கல்வெட்டு நடுகல்லாகும். தீய்ப்பாய்ந்ததைப் பற்றி இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. குண்டூரேப்பன் கொட்டாய் கல்வெட்டில் ‘பனைக்குளத்துப் பள்ளியில் பள்ளிக்காறன் புளியகாமுண்டன்’ என்ற சொற்றொடர் வருவது குறிப்பிடத்தக்கதாகும். காத்தாடிக் குப்பத்தில் உள்ள மற்றொரு நடுகல் விஜயராஜேந்திரன் என்ற பெயரில் உள்ளது. சிதைந்த இக்கல்வெட்டும் ஒரு நடுகல்லாகும். இது ஒரு செட்டி இறந்தமையைக் குறிப்பிடுகிறது. இவன் வீரன் என்பதும் ஒரு பூசலில் பட்டான் என்பது ஊகிக்கக்கூடியதாக உள்ளன.

முதலாம் குலோத்துங்கனுடைய (1070-1126) கல்வெட்டுகள் கங்கதேவன் பள்ளி (பக். 10) கங்காவரம் (பக். 13) சின்னக் கொத்தூர் (பக். 39) ஆகிய இடங்களில் உள்ளன. கங்கதேவன் பள்ளி கல்வெட்டு பாறைக் கல்வெட்டாகும் தீர்த்தமலையில் திரிபுராந்த தேவருக்கு தேவதான நிலமாக பராந்தக நல்லூர் வழங்கப்பட்டமையை இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. வீரராஜேந்திர ஜனனான்டுடையானும் அரண்மனையாரும் (கோயிற்றமர்) கொடுத்த கொடை இது. கங்காவரம் கல்வெட்டு நடுகல்லாகும். ஐங்குன்றத்து வெள்ளாளன் பூதன் குறிக்கப்படுகின்றான். சின்னகொத்தூர் கல்வெட்டு சோழப் பல்லவரையர் கொடுத்த பொன் கொண்டு அமுதுபடிகள் கல்களம் உடையார் கோயிலில் நிறைவேற்றப்பட்டமையைக் குறிப்பிடுகிறது. இதுவும் சிதைந்த கல்வெட்டாகும்.

மூன்றாம் குலோத்துங்கனுடைய (1178-1218) கல்வெட்டுகள் பெண்ணேஸ்வர மடம் (பக். 28,92,96). முழுவன பள்ளி (பக். 148), தருமபுரி (பக். 208) ஆகிய இடங்களில் உள்ளன. பெண்ணேஸ்வரமடத்தில் உள்ள மூன்றுகல்வெட்டுகளில் இரண்டு கல்வெட்டுகள்

அவனது சிறப்புப் பெயரான திரிபுவனவீர சோழன் என்ற பெயரில் உள்ளவை. இவற்றில் இரண்டு நந்தாவிளக்கு, திரிபுவன வீரன் சத்தி என்ற வழிபாடு ஆகியவற்றைக் குறிக்கின்றன. மற்றொன்று ஒரு சிவபிராமணருக்கு கோயிலில் பூசை செய்யும் 6 நாட்களுக்கான உரிமையை விற்றுக் கொடுத்ததைக் குறிப்பிடுகிறது. தருமபுரியில் உள்ள இம்மன்னது கல்வெட்டு தகடூரில் இருந்த முழமாயிரமுடையார் கோயிலில் வேளாலீசுரமுடையார் என்ற இறைவன் புதிதாகப் பிரதிஷ்டை செய்யப்பட்டு வழிபாட்டிற்குக் கொண்டு வரப்பட்டதைக் குறிப்பிடுகிறது.

மூன்றாம் இராசராச சோழனுடைய (1216-1256) கல்வெட்டுகள் பெண்ணேஸ்வரமடம் (பக் .89,93) தருமபுரி (பக். 203,206) ஆகிய இடங்களில் உள்ளன. பெண்ணேவர மடம் கல்வெட்டு பையூர் நிலை உடைய மதுராந்தக வீரநுளம்பன் பெண்ணை நாயனார் கோயில் சிவபிராமணரிடம் தட்டான் குட்டை என்ற ஏரியைக் கொடுத்ததைச் சொல்கிறது. இதற்காக இவன் 5 உதாரன், 5 சுத்த சலாகை என்ற பொற் காசுகளைப் பெற்றுக் கொண்டுள்ளான். இவ்வூரில் உள்ள மற்றொரு கல்வெட்டில் கூத்தாடும் தேவர் நாச்சியர் என்பவர் வாணகோ அரையரின் மகளார் என்றும் சோழனை முழுதுடையாள் என்றும் குறிக்கப்பட்டு இவள் நந்தாவிளக்கிற்கு பசு பத்தும் எருது ஒன்றும் கொடுத்த செய்தி சொல்லப்படுகிறது, இக்கல்வெட்டின் தொடக்கத்தில் கோட்டுருவமாக புலியும் செண்டும் பொறிக்கப்பட்டுள்ளமை இக்கல்வெட்டிற்கு அரச முக்கியத்துவம் கொடுப்பதாக உள்ளது. மூன்றாம் இராசராசசோழனின் பட்டத்தரசி வாணர்குல விளக்கு என அவனது மெய்க்கீர்த்தியில் புகழ்ப்படுவதைக்கொண்டு இந்த வாணமன்னனின் மகளான கூத்தாடும் தேவர் நாச்சியார் அவனது பட்டத்தரசி எனக் கருதலாம்.

மூன்றாம் இராசசேந்திர சோழனின் (1246-1279) கல்வெட்டு எனக் கருதக் கூடிய ஒரு கல்வெட்டு கங்காவரத்தில் (பக். 15) நடுகல்லாக உள்ளது. எயில் நாட்டுக் காமுண்டன் என்பவன் கலிஞ்சிறை புகுந்து காணிக்கும் பூமிக்குமாக இறந்தான் என்ற செய்தி உள்ளது. இதுமேலும் ஆய்வுக்குரியது. இவன் வீரராஜேந்திர எயில் நாட்டு ராஜன் அடியான் என்றும் ஈழச்சான்றான் என்றும் குறிக்கப்பட்டுள்ளான்.

## போசளர்

இரண்டாம் வல்லாளன் (1173-1200), இரண்டாம் நரசிம்மன் (1220-35), சோமேஸ்வரன் (1235-60), இராமநாதன் (1254-95), விஸ்வநாதன் (1294-97), மூன்றாம் வல்லாளன் (1292-1343) ஆகிய போசள மன்னர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். மூன்றாம் குலோத்துங்க சோழன் போசள இளவரசியை மணந்ததின் காரணமாக போசளர்களின் செல்வாக்கும் ஆட்சியும் தமிழகம் முழுதும் பரவின. இப்பகுதி கருநாடக எல்லையுடன் ஒட்டியுள்ளதால் இவர்களது கல்வெட்டுகள் 12க்கு மேல் இத்தொகுதியில் உள்ளன.

வீர நரசிம்மனது கல்வெட்டு பெண்ணேஸ்வர மடத்தில் (பக். 86) உள்ளது. இவனது ஆட்சியில் பையூர் நிலை உடைய வீரநுளம்பன் என்னும் குறுந்தலைவன்

பெண்ணைநாயனாருக்கு தட்டான் குட்டையும் அதன் விளை நிலங்களும் கொடுத்துள்ளான். சோமீஸ்வரனுடைய கல்வெட்டுகள் காரிமங்கலம் (பக். 183) கொளகத்தூர் (பக். 196,198) கோட்டை பைரஹல்லி (பக். 200) தருமபுரி (பக். 216) ஆகிய ஊர்களில் உள்ளன. காரிமங்கலம் கல்வெட்டு சிதைந்தது. கொளகத்தூர் கல்வெட்டில் புறமலை நாட்டார், வடகரைநாட்டார், தகடை நாட்டார் மற்றும் குளகத்தூர் முதலிகள் ஆகிய அனைவரும் சோமீஸ்வரன் மற்றும் அவனது தளபதி சோமயதண்ணாக்கர் ஆகியோரது வெற்றிக்கும் உடல் நலத்துக்குமாக ஏரிப்பற்று நிலம் கொடுத்த செய்தி சொல்லப்படுகிறது. இதே ஊரில் உள்ள மற்றொரு கல்வெட்டு 79 நாட்டாரும் குளகத்தூர் முதலிகளும் ஒரு பிராமணருக்கு பட்டவிருத்தி நிலம் ஒதுக்கித் தந்தமையைச் சொல்கிறது. கோட்டை பைரஹல்லி கல்வெட்டும் கொளகத்தூர் கல்வெட்டுப் போலவே அரசன் மற்றும் அவனது தளபதி தண்ணாயக்கர் ஆகியோர் உடல் நலம் மற்றும் வெற்றிக்காக நாட்டார்கள் இறைவனுக்குக் கொடைதந்தமையைச் சொல்கின்றது. தருமபுரி கல்வெட்டும் இவர்கள் வெற்றி மற்றும் உடல் நலத்திற்காக கடைக்கோட்டூரான நாநா தேசிபட்டனத்து இறைவன் இராஜராஜீஸ்வர முடையார்க்கு பூசை திருப்பணிகள் நடத்த வரிவருவாய்களைக் கொடுத்த செய்தியைச் சொல்கிறது.

வீர ராமநாதனது கல்வெட்டுகள் பாரூர் (பக். 82,84) நெடுசால் (பக். 74) அகரம் (பக். 149) ஆகிய இடங்களில் உள்ளன. பாரூர் கல்வெட்டு மன்னன், ஈசானீஸ்வரமுடைய நாயனார் கோயிலில் திருவிழா நடத்த வேலம்பட்டு என்று ஊரைத் தேவதானமாகக் கொடுத்ததைச் சொல்கிறது மற்றொரு கல்வெட்டில் மன்னனின் வெற்றி மற்றும் உடலநலத்திற்காக நாட்டவர், நாட்டு நாயகம் செய்வார் ஆகியோர் இறைவனுக்குத் திருவிழா திருப்பணிகள் நடத்த தங்கள் பகுதியில் வரும் குறிப்பிட்ட வரிவருவாய்களை ஒதுக்கித் தந்த செய்தி சொல்லப்பட்டுள்ளது. நெடுசால் கல்வெட்டு சோழ மண்டலத்தைச் சேர்ந்தவர் விளக்கு எரிக்கக் கொடை தந்தமையைக் காட்டுகிறது.

விஸ்வநாதனின் கல்வெட்டும் பாரூரில் உள்ளது. விக்கிரம பாண்டியச் சோழகோன் என்பவர் அவ்வூர் ஈசானீஸ்வர முடையார்க்குத் தேவதான மானியம் கொடுத்த செய்தியைச் சொல்கிறது. வீரவல்லாளனின் ஒசூர் கல்வெட்டு சகஆண்டு 1227 (கி.பி. 1305) மற்றும் பஞ்சாங்கக் குறிப்புடன் உள்ளது. இறைவனது வழிபாட்டிற்காக வரி வருவாய் கொடுக்கப்பட்டதாகத் தெரிகிறது. கல்வெட்டு சிதைந்துள்ளது.

## விஜயநகரர்

விஜயநகரர் காலக் கல்வெட்டுகள் இருமத்தூர், காரகுப்பம் குட்லட்டி, குருவிநாயன பள்ளி, சத்தூர், சின்னகொத்தூர், திம்மாபுரம், தீர்த்தம், பெண்ணேஸ்வர மடம், கடகத்தூர், தருமபுரி ஆகிய இடங்களில் உள்ளன. ஹரிஹரர் (1377-1404), புக்கர் (1404-06),

தேவராயர் (1422-46), மல்லிகார்ச்சுணர் (1446-65) விருபாக்ஷர் (1465-86) ஆகிய பேரரர்சர்களின் காலத்தவை இவை. இருமத்தூர் கல்வெட்டு (பக். 6) தொண்டை மண்டலத்து உத்திரமேரூரைச் சேர்ந்த நெல்வாயில் ஆர்ப்பாக்கிழான் கொடுத்த கொடை குறித்தது. கல்வெட்டு முழுமையாக இல்லை. காரக்குப்பம் (பக் 18) கல்வெட்டும் முழுமையாக இல்லை. அதனில் சூரிய கிரஹணம் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. குட்லட்டி (பக். 19) கல்வெட்டு முழுமையாக இல்லை. முழுமையாக உள்ள குருவிநாயனபள்ளி கல்வெட்டு (பக். 21,22) புக்கணருடையது. அது மன்னனின் நலத்திற்கும் வெற்றிக்குமாக தக்ஷிணாமூர்த்தி பண்டிதர் என்பவர்க்கு அங்கணப்பற்று தலைதூக்கினூரினை சர்வமானியமாகக் கொடுத்த செய்தியைச் சொல்கிறது. சத்தூர் (பக். 23) கல்வெட்டு தேவராயருடையது. பெருமுத்தி என்ற ஊரில் இடங்கை மாநியம், கவுண்டு மாநியம் தரப்பட்டதைச் சொல்கிறது. தேவராயரது கல்வெட்டுகள் திம்மாபுரம், (பக். 51) தருமபுரி (பக். 217) ஆகிய இடங்களிலும் உள்ளன. தருமபுரி கல்வெட்டு பொம்மயநாயக்கர் மகன் திம்மய நாயக்கரின் வெற்றி மற்றும் உடல் நலத்திற்காக இராஜராஜீசுரமுடையார் கோயில் பூசை மற்றும் திருப்பணிக்கு கடைக்கோட்டூர் ஏரியும் அதன் பாசன நிலங்களும் கொடுத்ததைக் குறிக்கின்றது. மல்லிகார்ச்சுணர் கல்வெட்டுகள் சின்னக்கொளத்தூர் (பக். 37) கடகத்தூர் (பக். 181) ஆகிய இடங்களில் உள்ளன. பெண்ணேஸ்வர மடம் கம்பண்ண உடையாரின் கல்வெட்டு (பக். 116) அவரது தளபதி கண்ட பல வெற்றிகளைக் கூறும் வரலாற்றுக் கல்வெட்டாகும். கண்டர்கண்டன் பெருவாய்க்கால் கோயிலுக்குத்தரப்பட்டதை இது குறிப்பிடுகிறது.

## சிற்றரசுகள்

சோழர் கால இறுதியில் அவர்களின் கீழ் இருந்த அதியர் மரபினர் இப்பகுதியை ஆண்டனர். அம்மரபில் விடுகாதழகிய பெருமாள் குறிப்பிடத்தக்கவன் அசேந்திரம் (பக். 4) குட்டூர் (பக். 188) குள்ளனூர் (பக். 194) தருமபுரி (பக். 208) ஆகிய இடங்களில் அதியர் கல்வெட்டுகள் உள்ளன. அச்சேந்திரத்தில் கங்காண்டை நாயன் அதியமான் திருவிளக்கேற்ற பத்து பணம் கொடுத்த செய்திசொல்லப்படுகிறது. குட்டூரில் இராசராச விடுகாதழகிய பெருமாளின் தளபதி (முதலி) சிங்கப் பெருமானின் பெரிய பிராட்டி (ஸ்ரீதேவி) உருவத்தை வழிபாட்டிற்கு வைத்த செய்தி சொல்லப்பட்டுள்ளது. தருமபுரி கல்வெட்டில் அதிகமானின் நலத்திற்காக அவனது அடியான், தெய்வப்பிரதிஷ்டை செய்த செய்தி சொல்லப்படுகிறது. குள்ளனூர் கல்வெட்டு அதிகமான் பெருவழியில் நடப்பட்ட காதக் கல்லாகும். நாவற்தாவளம் 29 காததூரத்தில் உள்ளமையை இது குறிப்பிடுகிறது.

திருமல்ல பூராதிராயர் அத்திமல்லன் என்ற சிற்றரசின் பெயரில் சின்னக் கொத்தூர் நெடுசால் ஆகிய ஊர்களில் எட்டு கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. சின்ன கொத்தூர் (பக். 34) கல்வெட்டில் பல வரிகளின் பெயர்கள் சொல்லப்படுகின்றன. இவ்வரிகள் இறையிலியாகக் கொடுக்கப்பட்டன. மற்றொரு கல்வெட்டு (பக். 44) நடுகல்லாகும். அத்திமல்லனின் தளபதி இறந்த செய்தி சொல்கிறது. நெடுசால் கல்வெட்டுகள் இவனது முதலிகள் கொடுத்த கொடைகள், இவன் தந்த வரிச்சலுகை, பற்றிச் சொல்கின்றன. கோயிலுக்கு வாத்தியக்காரராக (கொட்டுவான்) ஒருவர் காணி உரிமையுடன் நியமிக்கப்பட்ட செய்தியும் உள்ளது.

## பிறசெய்திகள்

பிற்காலப் பாண்டிய மன்னர்களது கல்வெட்டுகள் இப்பகுதியில் காணப்படவில்லை. பிற்காலப்பாண்டியரது ஆட்சி தமிழகம் முழுதும், நெல்லூர் வரையிலும் பரவியிருந்தது. எனினும் இப்பகுதியில் கல்வெட்டுகள் இல்லாமை குறிப்பிடத்தக்கதாகும்.

பெண்ணேஸ்வரமடத்து இறைவனுக்கு கொடுக்கப்பட்ட வரிச்சலுகைகள் மாநியங்கள் அதிகாரிகளாலும் பிற சிற்றரசுகளாலும் இடையூர்இன்றி நடக்க வேண்டும் என்ற நோக்கத்தில் வீரராமநாதன் காலத்தில் ஒரு கடுமையான அரசாணை வெளியிடப் பட்டுள்ளது. கோயில் மற்றும் மடத்திற்கு வரவேண்டிய வருவாய்களைத் தடை செய்தாலோ, அல்லது சோறு முதலியவை கேட்டு வந்தாலோ அவர்கள் சிரச்சேதம் செய்யப்படவேண்டும் என இவ்வாணை குறிப்பிடுகிறது. அவர்கள் அதிகாரிகள், கணக்கர், காரியம் செய்வார், கூசர் எனச்சுட்டப் படுகின்றனர்.

பையூர் கல்வெட்டு (பக். 128) இராமநாதன் காலத்தில் விடுகாதழகிய பெருமாள் (அதியன்) விடுத்த ஆணை பற்றியது. வீரநுளம்பனின் பற்றுக்களில் அடிமை (அடைமை) கொள்வது பற்றியது இவ்வாணை.

பல்லவர் சோழர் செப்பேடுகளில் சொல்லப்படுவது போல சதுர்வேதி மங்கல ஊர்களைப் பிராமணர்களுக்கு பங்குகளாகப் பிரித்துக் கொடுத்ததை நரிமேடு (பக். 63) நெடுங்கல்(பக் 65) வறட்டனபள்ளி (பக் 145) குட்டூர் (பக். 189) ஆகிய ஊர்க் கல்வெட்டுகள் காட்டுகின்றன.

நாநாதேசிபட்டனம் (பக். 33) வியாபாரிகள் (பக். 54, 87) கைக்கோளர் (பக். 97) தாவளம் (பக். 194) ஆகிய குறிப்புகளும் பல்வகை வரிகளும் இப்பகுதி வணிக நடவடிக்கைகளுடன் விளங்கியதைக் காட்டுகின்றன.

நில அளவுகள் விதைவிதைக்கும் அளவில் கணக்கிடப்பட்டன. குளகம், கண்டகம் என்ற முகத்தல் அளவைகள் அதற்குத் தொடர்பாகச் சொல்லப்படுகின்றன. குழி அளவும் ஒரு கல்வெட்டில் காணப்படுகிறது.

மோட்டூரில் உள்ள நடுகல் (பக். 144) பாம்புகடித்துக் கணவன் இறந்ததால் அவனது மனைவி தீக்குளித்து இறந்து போன செய்தியைச் சொல்கிறது. மிண்டகிரி நடுகல் (பக். 138) புலியுடன் பொருதி இறந்தவன் சிவன் படவரில் ஒருவன் என்று குறிப்பிடுகிறது. சிவன் படவர், செம்படவராக இருக்கலாம்.

இலளிகத்தில் உள்ளகல்வெட்டு அடுத்தடுத்து தமிழ் எண்கள் குறிக்கப்பட்டுக் காணப்படுகிறது. இண்டூர் கல்வெட்டு ஏற்கனவே இருந்த புருஷவருமனுடைய நடுகல்லினைச் செதுக்கிப் பொறிக்கப்பட்ட இராசாதிராசனின் கல்வெட்டாகும். இக்கல்வெட்டு கீழிருந்து மேலாக வெட்டப்பட்டுள்ளது. இதுபோன்று கீழிருந்து மேலாக வெட்டப்பட்ட கல்வெட்டுகள் பெரியபட்டனம் (இராமநாதபுர மாவட்டம்) அரச்சலூர், திங்களூர் (ஈரோடு மாவட்டம்) ஆகிய இடங்களிலும் காணப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இத்தொகுதியில் உள்ள கல்வெட்டுகள் ஆய்வு செய்வோர்க்கு பல்வகையிலும் அரசியல், சமூகப் பொருளாதாரச் செய்திகளைத் தரக்கூடிய தனித்தன்மை வாய்ந்தவை என்று சுருங்கக் சொல்லலாம்.

**த.நா.அ. தொல்லியல் துறை** **தொடர் எண் : 23 / 1974**

| | | | | |
|---|---|---|---|---|
| மாவட்டம் | : கிருஷ்ணகிரி | ஆட்சி ஆண்டு | : - |
| வட்டம் | : ஓசூர் | வரலாற்று ஆண்டு | :கி.பி. 14 ஆம்நூ.ஆ |
| ஊர் | : அச்சேந்திரம் | இந்தியக் கல்வெட்டு | |
| மொழி | : தமிழ் | ஆண்டுஅறிக்கை | : - |
| எழுத்து | : தமிழ் | முன் பதிப்பு | : - |
| அரசு | : - | ஊர்க் கல்வெட்டு | |
| மன்னன் | : - | எண் | : 2 |

இடம்: அனுசகிரி திம்மராயசுவாமி கோயில் அதிட்டானம்.

குறிப்புரை: கண்ணமங்கலத்தில் இருக்கும் மாறாண்டன் சொக்கதேவர் மகன் செம்பதேவன் என்பவர் அத்திசமுத்திரத்தில் உள்ள திருவத்தியூர் பெருமாளுக்கு 10 பணம் முதலீடாகக் கோயில் நம்பிமாரிடம் கொடுத்து அதன் வட்டி (பொலிசை) கொண்டு திருவிளக்கேற்ற ஏற்பாடு செய்ததை இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது.

**கல்வெட்டு:**

1. ஸ்வஸ்திஸ்ரீ கண்ணமங்கலத்திலிருக்கும் மாறாண்டன் சொ
2. க்கதேவர் மகன் செம்பதேவன் அத்திசமுத்திரத்தில் திருவத்தி
3. யூற் பெருமாளுக்கு திருவிளக்கேற்ற குடுத்த பணம் பத்து இப்ப
4. ணம் பத்தின் பொலிசை கொண்டேற்ற கடவேன் நம்பிமாரே
5. ன் சந்திராதித்தவரை

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் : 27 / 1974

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | கிருஷ்ணகிரி | ஆட்சி ஆண்டு | : | - |
| வட்டம் | : | ஒசூர் | வரலாற்று ஆண்டு | : | கி.பி. 14 நூற்றாண்டு |
| ஊர் | : | அச்சேந்திரம் | இந்தியக் கல்வெட்டு | | |
| மொழி | : | தமிழ் | ஆண்டு அறிக்கை | : | - |
| அரசு | : | - | முன் பதிப்பு | : | - |
| மன்னன் | : | - | ஊர்க் கல்வெட்டு எண் | : | 6 |

இடம்: அனுசகிரி திம்மராய சுவாமி கோயில் அதிட்டானம்

குறிப்புரை: இதுவும் முன் கல்வெட்டின் தகவலையே தெரிவிக்கிறது. சொக்க தேவன் மகன் மாதேவன் முதலீடாக வைத்த பத்துப் பணத்தின் வட்டி கொண்டு ஒரு சந்தி விளக்கு எரிக்கப்படுகிறது. பணம் பெற்றவர் கோயில் நம்பிமார் ஆவர். முன் கல்வெட்டில் இடம் பெற்ற செம்பதேவனும் இதில் இடம் பெறும் மாதேவனும் சகோதரர்கள் எனலாம்.

**கல்வெட்டு:**

1. ஸ்வஸ்தி ஸ்ரீ கண்ணிமங்கலத்திலிருக்கும் சொக்கதேவன் மகன் மாதேவனேன் அத்திசமுத்திரத்தில்
2. திருவத்தியூர்ப் பெருமாளுக்கு ஒரு சந்தி விளக்கெரிப்பதற்கு நம்பிமார் விடத்தில் குடுத்த பணம் பத்து இந்தப் பலிசை கொண்டு சந்தி ராதித்தவரை எரிக்கக் கடவோம்

த.நா.அ. தொல்லியல்துறை தொடர் எண்: 28 / 1974

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | கிருஷ்ணகிரி | ஆட்சி ஆண்டு | : | - |
| வட்டம் | : | ஒசூர் | வரலாற்று ஆண்டு | : | கி.பி. 10 ஆம் நூ.ஆ |
| ஊர் | : | அச்சேந்திரம் | இந்தியக் கல்வெட்டு | | |
| மொழி | : | தமிழ் | ஆண்டு அறிக்கை | : | - |
| எழுத்து | : | தமிழ் | முன் பதிப்பு | : | |
| அரசு | : | - | ஊர்க் கல்வெட்டு எண் | : | 7 |
| மன்னன் | : | - | | | |

இடம்: அனுசகிரி திம்மராயசுவாமி கோயில் கிழக்கு முப்படைக் குமுதம்

குறிப்புரை: முகுளிப்பள்ளியில் இருக்கும் தசபாண்டை பெண்டாட்டி தசபாண்டை என்பவர், நம்பியார் திருவத்தியூர் ஆழ்வார்க்குச் சந்தி விளக்கு வைக்க 12 காசு முதலீடு அளித்துள்ளார். பூசையை நடத்த நம்பிமார் உடன்படுகின்றனர்.

**கல்வெட்டு:**

1. ஸ்வஸ்திஸ்ரீ யுவ(வ) ஸம்வத்ஸரத்து வைகாசி மாதம் முதல் முகுளிபள்ளியிலிருக்
2. கும் தசபாண்டை பெண்டாட்டி தசபாண்டையேந் நாயநார் திரு
3. வத்தியூற் பெருமாளுக்கு சந்தி விள்க்கு ஏற்றக் கடவதாக ஒரு பொன் பண்
4. டாரத்திலே குடுத்தேன் இவ்விளக்கு சந்திராதித்தவரை செல்லக் கடவது
5. நாயநார் ஆதமாள் அத்தங் கொண்டு பூசை மாக்க பற்றக் கடவேன் நம்பியாரேன்

**த.நா.அ.தொல்லியல்துறை** **தொடர் எண் : 29 / 1974**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | கிருஷ்ணகிரி | ஆட்சி ஆண்டு | : | - |
| வட்டம் | : | ஓசூர் | வரலாற்று ஆண்டு | : | 14 ஆம் நூற்றாண்டு |
| ஊர் | : | அச்சேந்திரம் | இந்தியக் கல்வெட்டு | | |
| மொழி | : | தமிழ் | ஆண்டு அறிக்கை | : | - |
| எழுத்து | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| அரசு | : | அதியர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 8 |
| மன்னன் | : | கங்காண்டை நாயன் | | | |

இடம்: அனுசகிரி திம்மராயசுவாமி கோயில் அதிட்டானம்.

குறிப்புரை: கங்காண்டைநாயன் அதிகமான் ஆட்சியின் போது கண்ணமங்கலத்து ஜெயங்கொண்ட சோழ வேளான் மார்கயன் என்பவர் திருவத்தியூர் பெருமாள் கோயிலுக்குப் பத்து பணம் வழங்கி விளக்கேற்ற ஏற்பாடு செய்கிறார். பத்துப் பணத்தினை வட்டிக்குவிட்டு அதன் தொகை கொண்டு விளக்கேற்ற நம்பிமார் உடன்படுகின்றனர்.

**கல்வெட்டு:**

1. ஷ்வஷ்திஶ்ரீ கங்காண்டை நாயன் அதிகமான் அத்திசமுத்திரத்தில் திருவத்தியூர் பெருமாளுக்கு
2. கண்ணி மங்கலத்து ஜயங்கொண்ட வேளாண் மார்கயனேன் குடுத்த பணம் ய இப்பணத்துப் பொலிசையா[ல்]
3. ச[ந்திராதித்த] வரை திருவிளக்கேற்றக் கடவோம் நம்பியாரேன் இப்படி அறிவோம் ஊஹா ஸஹெயோம்.

**த.நா.அ.தொல்லியல்துறை** **தொடர் எண் : 50 / 1975**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | கிருஷ்ணகிரி | ஆட்சி ஆண்டு | : | 28 ஆம் ஆண்டு |
| வட்டம் | : | தேன்கனிக்கோட்டை | வரலாற்று ஆண்டு | : | கி.பி. 1040 |
| ஊர் | : | அணுசோனை | இந்தியக் கல்வெட்டு | | |
| மொழி | : | தமிழ் | ஆண்டு அறிக்கை | : | - |
| எழுத்து | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| அரசு | : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 1 |
| மன்னன் | : | இராஜேந்திரன் I | | | |

இடம்: கெலமங்கலம் ராயக்கோட்டைச் சாலையின் மேற்புறம் உள்ள 'ஈர்லு குடில்' என்று வழங்கப்படும் இடத்தில் உள்ளது.

குறிப்புரை: கூட அமைப்பு நடுகல் வீரன் வலது கையில் வாளை ஓங்கி, இடதுகைக் குறுவாளால், தன் மீது பாயும் புலியைக் குத்துகின்ற நிலையில் காட்டப் பட்டுள்ளான். கல்வெட்டுள்ள கல் வீரனது உருவத்தின் வலது புறத்தில் உள்ளது. முதலாம் இராசேந்திர சோழனது 28ஆவது ஆட்சி ஆண்டில் 'அஞ்சிட்டம் என்ற ஊரை நாயகம் செய்யும் கங்க ஆடவர் சாமியாரின் மகன் கங்கமார்த்தாண்ட ஆடவசாமி என்ற இவ்வீரன் கோயிற் கார்யமாக உழுது கொண்டிருந்த போது தன்னை வந்து தாக்கிய புலியைக் குத்தி அழித்து மாண்டான் . அச்சிட்டம் என்ற ஊர் தற்பொழுது அஞ்செட்டி என்ற பெயரில் அருகில் உள்ளது. இவ்வூரின் மலையில் உள்ள கோட்டை அஞ்செட்டி துர்க்கம் என்று அழைக்கப்படுகிறது. திப்புசுல்தான் காலத்தில் இக்கோட்டை சிறப்புப் பெற்றிருந்ததாகத் தெரிகிறது.

**கல்வெட்டு:**

1. ஸ்வஸ்திஸ்ரீ கெங்கையு கிடாரமு பூர்தேச
2. மு கொண்ட கோப்பரகேசரி பன்மராகிய ஸ்ரீ ராஜே
3. [ந்]திர சோழ தேவர்க்கு யாண்டு உயஅ
4. நுழம்பபாடியான நிகரிலிசோழ
5. மண்டலத்து தகமாரு நாட்டு குயினா
6. ட்டு அஞ்சிட்டத்தில் நாய. . .
7. ர் கங்க ஆடவர் சாமியாரு மகன்
8. கங்கமார்த்தண்ட ஆடவர்சாமி
9. கோயில் காய த்துக்கு ஏர்ப்ப
10. ணி செய்து குத்தி அளிந்து பட்டான்

த.நா.அ.தொல்லியல்துறை தொடர் எண் : 100 / 1973

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : கிருஷ்ணகிரி | ஆட்சி ஆண்டு | : | கலி 4653 ? |
| வட்டம் | : போச்சம் பள்ளி | வரலாற்று ஆண்டு | : | கி.பி.1542 ? |
| ஊர் | : இருமத்தூர் | இந்தியக் கல்வெட்டு | | |
| மொழி | : தமிழ் | ஆண்டு அறிக்கை | : | - |
| எழுத்து | : தமிழ் | முன் பதிப்பு | : | - |
| அரசு | : விஜயநகரர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 1 |
| மன்னன் | : இம்மடி புக்கராயர் | | | |

இடம்: சேரியின் மேற்கு எல்லையில் உள்ள சாசனக் கல்.

குறிப்புரை: கலியாண்டிற்கும் விபவ வருடத்திற்கும் பொருந்தவில்லை. இம்மடிராயர் காலத்தில் தொண்டைமண்டலத்து உத்தரமேரூர் பற்று நெல்வாயில் ஆர்ப்பாக்கிழான் முதலிப்பிள்ளை ஏதோ தானம் செய்துள்ளான்.

**கல்வெட்டு:**

1. ஸ்வஸ்திஸ்ரீ
2. ஸ்ரீ மந் ஊஹா
3. மண்டலீ ஸ்வரன் ஹரிராய
4. விஹாடன் வாஷெக்குத் தப்பு
5. வராயர் கண்டன் மூவராயர் கண்ட
6. ன் ஸ்ரீவீர ஹு க்கண்ண உடையர் குமாரன்
7. அரியராய உடையார் குமாரன் இருமடிபுக்க
8. ண்ண உடையார்க்குச் செல்லா நின்ற யாண்டு க
9. லியுக ஸம்வத்ஸரம் ௪சா௱யா௩ ல் மேல்செல்லா நின்
10. ற வி வவ ஸம்வத்ஸரத்து ஐப்பசி மாதம் ய திய தி
11. வூவ௨ பக்ஷத்து உத்திட்டாதியும் செவ்வாய்
12. கிழமையும் பெற்ற நாள் குலவேபன் தொண்டை மண்டலத்து
13. உத்திரமே லூர் பற்று நெல்வாயில் ஆர்ப்பாக்கிழா ன் முதலிப்பிள்ளை
14. ...

**த.நா.அ.தொல்லியல்துறை** **தொடர் எண் : 80 / 1971**

| | | | | |
|---|---|---|---|---|
| மாவட்டம் | : கிருஷ்ணகிரி | ஆட்சி ஆண்டு | : | 2 |
| வட்டம் | : கிருஷ்ணகிரி | வரலாற்று ஆண்டு | : | கி.பி. 10 ஆம் நூ.ஆ |
| ஊர் | : இளவம்பாடி | இந்தியக் கல்வெட்டு | | |
| மொழி | : தமிழ் | ஆண்டு அறிக்கை | : | - |
| எழுத்து | : தமிழ் | முன் பதிப்பு | : | - |
| அரசு | : - | ஊர்க் கல்வெட்டு எண் | : | 1 |
| மன்னன் | : அண்ணயனார் | | | |

இடம்: காட்டு வேடியப்பன் கோயிலில், கிழக்குப் பார்த்து நிற்கும் நடுகல்.

குறிப்புரை: கல்லில் வீரனது உருவம் நேராகப் பார்த்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. இடது கையில் வில்லும், வலது கையில் ஒரு படையும் ஏந்திய நிலை. இடது காலின் பக்கத்தில் இரண்டு வாள்கள் உள்ளன. உருவத்தின் மேற்பகுதியில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. கோவூர் நாட்டைச் சேர்ந்த சிறுபுலூரில் வாழும் தாழிபுனாகர் என்பாரின் மகனான மோடன் என்பான் வீர மரணம் அடைந்ததைக் குறிக்கிறது.

**கல்வெட்டு:**

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீ இரண்டா
2. வது அண்ணயனார்
3. ஆளா நில்க கோவூர் நாட்டு
4. சிறுபுலூர் தாழிபுனாகர் ம
5. கன் மோடன் ஊர் [அழிவில்] ப
6. ட்டான்

த.நா.அ.தொல்லியல்துறை　　　தொடர் எண் : 54 / 1974

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | கிருஷ்ணகிரி | ஆட்சி ஆண்டு | : | சகம் 1227 |
| வட்டம் | : | ஓசூர் | வரலாற்று ஆண்டு | : | கி.பி. 1305 |
| ஊர் | : | ஓசூர் | இந்தியக் கல்வெட்டு | | |
| மொழி | : | தமிழ் | ஆண்டு அறிக்கை | : | - |
| எழுத்து | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| அரசு | : | போசளர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 25 |
| மன்னன் | : | வீரவல்லாளன் | | | |

இடம்: சந்திர சூடேசுரர் கோயில் நுழைவாயிலின் இடது புறம்.

குறிப்புரை: போசள வீரவல்லாளன் காலத்தில் அவரது பிரதிநிதிகள் அல்லது அதிகாரிகள் கோயிலுக்கு தேவதான நிலம் தொடர்பான வரி வருவாய் ஏற்படுத்தித் தந்தமை பற்றிக் குறிப்பிடுகிறது.

**கல்வெட்டு:**

1. ஸகரை யாண்டு ௲உ௱உ௰எ செ
2. ன்ற நாள் விகாரி ஸ [ம்வ]ற்ஸரது க
3. ன்னி நா [ய]ற்று பூவ௨ப க்ஷத்துத்தி
4. தியையும் விசாகமும் திங்கள் கி
5. ழமையும் பெற்ற நாள்
6. ஸ்ரீமநு வ௨ரதாவச்ச [கூ௨வத்தி]
7. ஸ்ரி[ரி] ஹொய்சள வீரவல்லா
8. ள டெவர் ஸவ௨ செம . . .
9. த் தானத்தாருக்கு . . .
10. க் கோயில் முதலி கங்கனை
11. க் கொண்டானே . . .
12. காணிக்கை கொறு கேடடு
13. . . . வ கோ. . .
14. இராயஸ௴ போக[ம்கொ]ள்ள வேண். . .
15. மாந தேவதான. . .ல் முதலிக்கு . . .
16. சை புன்[சை] . . . ராம ந . . .
17. கொண்டு திரும்ப கொண்டு பூ . . .
18. காணிக்கை . . . த்தவம் . . .
19. . . .ணி செய்யவு . . .
20. . . . ல் ம. . .
21. தோம் ஆண . . .

**த.நா.அ.தொல்லியல்துறை** **தொடர் எண் : -**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | கிருஷ்ணகிரி | ஆட்சி ஆண்டு | : | - |
| வட்டம் | : | ஒசூர் | வரலாற்று ஆண்டு | : | *30.1.1850* |
| ஊர் | : | ஒசூர் | இந்தியக் கல்வெட்டு | | |
| மொழி | : | ஆங்கிலம் | ஆண்டு அறிக்கை | : | - |
| எழுத்து | : | ஆங்கிலம் | முன் பதிப்பு | : | Tomb insc.Vol.2No:2346 |
| அரசு | : | ஆங்கிலேயர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 27 |
| மன்னன் | : | - | | | |

இடம்: *கல்லறையில் உள்ளது.*

குறிப்புரை: *சேலம் மாவட்ட ஆட்சியர் லாக் ஹார்ட் 30.1.1850ல் இறந்த செய்தியும் அவரது மனைவி அவரது நினைவாக இக்கல்லறையை எடுத்த செய்தியும் சொல்லப்படுகின்றன.* 'List of Inscriptions on Tombs and monuments in Madras Presidency Vol-2' *எண் 2346ல் பின் வரும் குறிப்பு உள்ளது.* - Third Son of william Elliott M.P. for selkirhsine 1806-30 who assumed the name of lock hart. He married in July 25th 1825, Mary Elizabath Frances fifth daughter of W. Proctor of Drooge Vlie, Cape of Good hope.

**முன்பக்கம்**

1. **In Memory**
2. **of**
3. **Walter Elliott Lock Hart M.C.S.**
4. **Collector of Salem**
5. **Died January 30-1850 Aged 49**

**பின்பக்கம்**

1. **In Memory of**
2. **Walter Elliott Lock Hart M.C.S.**
3. **Collector of Salem**
4. **Died January 30. 1850**
5. **aged 49 years**
6. **This Tomp was errected by his widow as a token**
7. **of her affection**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | கிருஷ்ணகிரி | ஆட்சி ஆண்டு | : | 32 |
| வட்டம் | : | தேன்கனிக்கோட்டை | வரலாற்று ஆண்டு | : | கி.பி. 1101 |
| ஊர் | : | கங்கதேவன்பள்ளி | இந்தியக் கல்வெட்டு | | |
| மொழி | : | தமிழ் | ஆண்டு அறிக்கை | : | - |
| எழுத்து | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| அரசு | : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 1 |
| மன்னன் | : | குலோத்துங்கன் I | | | |

இடம்: கங்கதேவன்பள்ளிக்கும் மல்லிகார்ச்சுன துர்க்கத்திற்கும் இடையில் உள்ள பாறையில் உள்ளது.

குறிப்புரை: முதலாம் குலோத்துங்க சோழனுடைய மெய்க்கீர்த்தியுடன் தொடங்கும் இக்கல்வெட்டு அவனது 32வது ஆட்சி ஆண்டில் பொறிக்கப்பட்டதாகும். வீரராஜேந்திர ஜனனாடுடையானும், அரண்மனையைச் சேர்ந்தவர்களும் (கோயிற்றமர்) தீர்த்தமலை திரிபுராந்தக தேவர் என்ற இறைவனுக்கு பராந்தக நல்லூர் என்ற ஊர் தேவதானமாகக் கொடுத்தனர். அவ்வூரின் எல்லைகளில் எல்லைக் கற்கள் நடப்பட்டன. கோயில் சிவபிராமணர்கள் தேவதான ஊரினைப் பெற்றுக் கொண்டதாகத் தெரிகிறது.

**கல்வெட்டு:**

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீ புகழ்மாது விளங்க சயமாது விரும்ப நிலவ மலர் மகள் புணர உரி
2. மையிற் சிறந்த மணிமுடி சூடி வில்லவர் குலைதர மீநவர் நிலைகெட
3. ஏனை மந்னவரிரியலுற்றிழிதரத் திக்கனைத்துந் சக்
4. கர நடாத்தி விஜையாபிஷேகம் பண்ணி வீரசிங்காசன
5. த்து அவனிமுழுதுடையாளொடும் வீற்றிருந்தருளிய கோவிராஜ
6. கேசரி பத்மரான உடையார் ஸ்ரீகுலோத்துங்க சோழ ஜெவற்கு யாண்டு முப்பத்திரண்டாவது
7. முடிகொண்ட சோழ மண்டலத்து ராஜேந்த்ர சோழ வள நாட்டுச் சீயகலநாட்டுச்

8. சேலைபுரத்தில் தீர்த்தமலையில் தி[ரி]புராந்தக தேவரு பனைய நாரமனான வீரராஜேஜு ஜ

9. ன னாடுடையானும் கோயிற்றமரும் கூடி ஷெவஷாநமாக விட்ட [ஊர்] பரா

10. ந்தக நல்லூர் திருமலைக்கு வடக்கு [இக்..காடு] இச்சாசனம் வெட்டி கல்லை எல்

11. லையாக கிழக்கில் எல்லை கிழக்கில் [ஈலும்] மேற்கில் எல்லை மேற்கிலேயும் நடு

12. விச்சுக் குடுத்[தே]தந் ராஜேஜு ஜனனாடுடையாநேந் தேவஷாநம் இரக்குவாந்

13. குராற் பசுவைக் கொ

14. ன்ன பாவங் கொள்

15. வான் ஸிவஸ்ராஹ்ணந் . .

16. டந்நுக்கு குடுத்தேந் வீரராஜேஜு

17. ஜன னாடுடை யா[நே]ந்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | கிருஷ்ணகிரி | ஆட்சி ஆண்டு | : | - |
| வட்டம் | : | தேன்கனிக்கோட்டை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.12 ஆம்.நூ .ஆ |
| ஊர் | : | கங்கதேவன்பள்ளி | இந்தியக் கல்வெட்டு | | |
| மொழி | : | தமிழ் | ஆண்டு அறிக்கை | : | - |
| எழுத்து | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| அரசு | : | - | ஊர்க் கல்வெட்டு எண் | : | 2 |
| மன்னன் | : | - | | | |

இடம்: முனீசுவரன் கோயில் என விளங்கும் நடுகல் கோயில்

குறிப்புரை: சோழர் காலத்தைச் சேர்ந்த இந்த நடுகல்லில் மேலே கல்வெட்டும் கீழே மாடுகளும் போரிடும் இருவீரர் சிற்பங்களும் காட்டப்பட்டுள்ளன. மாடுகளில் ஒன்று பின்புறம் பார்க்க, மற்ற நான்கும் போரிடும் வீரர்களை நோக்குகின்றன. வீரன் ஒருவன் நிமிர்ந்த நிலையில் நிற்க, மற்றொருவன் விழும் நிலையில் காட்டப்பட்டுள்ளான். ஆநிரை மீட்டல் போரில் இறந்துபட்ட வீரனுக்கு எடுக்கப்பட்ட நடுகல், எழுத்துக்கள் சிதைந்துள்ளதால் வீரனின் பெயர் தெரியவில்லை.

**கல்வெட்டு:**

1. ஸ்வஸ்திஸ்ரீ முடிகொண்ட சோழ ம
2. ண்டலத்து இராஜேஜ்ந்ர சோழவள
3. நாட்டுக் கங்கநாட்டு பாக்க
4. ற சாத்தன் பயல்
5. வாளை . . .
6. ற் பேர்களெங்கிலு . . . க
7. ண்டை ஆளைக் குத்திப் பாட்டன்

**த.நா.அ.தொல்லியல்துறை** **தொடர் எண் : 84 / 1973**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | கிருஷ்ணகிரி | ஆட்சி ஆண்டு | : | 2 |
| வட்டம் | : | கிருஷ்ணகிரி | வரலாற்று ஆண்டு | : | கி.பி. 1073 |
| ஊர் | : | கங்காவரம் | இந்தியக் கல்வெட்டு | | |
| மொழி | : | தமிழ் | ஆண்டு அறிக்கை | : | - |
| எழுத்து | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| அரசு | : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 1 |
| மன்னன் | : | குலோத்துங்கன் I | | | |

இடம்: தனியார் கொல்லையில் உள்ளது.

குறிப்புரை: கல்வீடு அமைப்பில் உள்ள நடுகல். வீரன் உருவம் தனியாகவும் கல்வெட்டு தனியாகவும் பொறிக்கப்பட்டுள்ளன. வீரன் வலக்கையில் குறுவாளும் இடக்கையில் வில்லும் கொண்டுள்ளான். இவனது வலப்புறத்தில் குதிரை மீது ஒரு வீரனும் கிழே நின்ற நிலையில் ஒரு பெண்ணும் உள்ளனர். இடதுபுறம் இரு வீரர்கள் தனித்தனியே நிற்கின்றனர். மேலே சுவர்க்கக் காட்சி காட்டப்பட்டுள்ளது. கல்வெட்டு மிகவும் சிதைந்துள்ளமையால் செய்தியினைத் தெளிவாக அறிய இயலவில்லை. வெள்ளாளன் பூதனான மல்லையன் சந்திரன் மற்றும் நாத்துகன் பெயர்கள் உள்ளன.

**கல்வெட்டு:**

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீ கோராஜகேஸரி பன்மராந
2. வுடையார் ஸ்ரீ ராஜேந்த்ர சோழ தே
3. வற்கு யாண்டு மூ[ன்]றாவது நிகரிலி
4. சோழ மண்டலத்து தகடு [ர்] நா
5. ட்டு கங்கநாட்ட ஐ [ங்குன்ற] த்தி[ரு] க்கு
6. வெள்ளா[ள]ன் பூதனான மல்லையந்
7. ஸந்த்ரன் னாதி . . . ராஜன் கலி
8. [தி]ன்னாற . . . கண் . . . நாத்துகன் செ
9. . . . ய்து பட்[டார்]

**த.நா.அ.தொல்லியல்துறை** **தொடர் எண் : 85 / 1973**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | கிருஷ்ணகிரி | ஆட்சி ஆண்டு | : | 2 |
| வட்டம் | : | கிருஷ்ணகிரி | வரலாற்று ஆண்டு | : | கி.பி. 1036 |
| ஊர் | : | கங்காவரம் | இந்தியக் கல்வெட்டு | | |
| மொழி | : | தமிழ் | ஆண்டு அறிக்கை | : | - |
| எழுத்து | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| அரசு | : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 2 |
| மன்னன் | : | இராசேந்திரன் I | | | |

இடம்: ஊருக்கு வடமேற்கில் 1 கி.மீ. தொலைவில் அனுகோடியூர் செல்லும் சாலையின் வடபுறக்கொல்லையில் உள்ள தனிக்கல்.

குறிப்புரை: முதலாம் இராசேந்திர சோழன் காலத்தில் இராஜேந்திர சோழக் காமுண்டன் என்ற வீரன், தன்னாட்டு ஆநிரைகளைப் பங்கள நாட்டவர் கவர, அதனை மீட்டு இறந்துபட்டான். அவனுக்காக எடுக்கப்பட்டது இந் நடுகல்.

**கல்வெட்டு:**

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீ கோவு கேஸரி வந்மரா[ன] உடையார் ஸ்ரீ
2. ரா சேந்த்ர சோழ தெவக்கு யாண்டு இருபத்து னாலா
3. வது நிகரிலி சோழ மண்டலத்து தகடு[ர்] னா
4. ட்டு எயிநாட்டுனாட்டுக் காமுண்டந் அ
5. தீப்[பால] பேழையந் வீரன் நக்குடியாந்
6. இராஜேந்த்ர சோழ காமுண்டன் எயிநாட்டு
7. மி[ரெ]வப்பள்ளி திருப்பேறு ஏறி மாடு நிலத்துவை
8. பங்கள நாட்டு ஆச்சாடி உள்ளிட்ட மாடப்பியரை
9. கொள்ள மாடு மீட்டு ஊரழிய பட்டார்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | கிருஷ்ணகிரி | ஆட்சி ஆண்டு | : | 3 |
| வட்டம் | : | கிருஷ்ணகிரி | வரலாற்று ஆண்டு | : | கி.பி. 1249 |
| ஊர் | : | கங்காவரம் | இந்தியக் கல்வெட்டு | | |
| மொழி | : | தமிழ் | ஆண்டு அறிக்கை | : | - |
| எழுத்து | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| அரசு | : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 3 |
| மன்னன் | : | இராசேந்திரன் III | | | |

இடம்: கங்காபுரத்திலிருந்து அனுக்கோடியூர் செல்லும் சாலையில் கிழக்குப் பார்த்து நிற்கும் நடுகல்.

குறிப்புரை: நடுகல்லின் அமைப்பு கல்திட்டையைப் போன்றுள்ளது. கல்வெட்டு வாசகம் தனிக் கல்லிலும், உருவம் தனிக் கல்லுமாக காணப்படுகின்றன. இராஜேந்திரசோழனின் மூன்றாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு. வீரராஜேந்திர எயில்நாட்டு ராஜன் அடியானும் நாட்டுக் காமுண்டனுமான ஈழச்சான்றான் கடுமையான காவல் மேற்கொண்டு (கலிஞ்சிறை புக்கு) இறந்ததாகக் கல்வெட்டு குறிப்பிடுகிறது. விஜய ராஜேந்திர மண்டலமும் தகடூர்நாடு, எயில்நாடு ஆகிய நாடுகளும் ஐங்குன்றமும் குறிப்பிடப்படுகின்றன.

**கல்வெட்டு:**

1. ஸ்வஸ்திஸ்ரீ ராஜேந்த்ர சோழதேவற்
2. கு யாண்டு மூன்றாவது விஜெயராஜெ
3. ந்த்ர மண்டலத்துத் தகடூ[ர்] நாட்டு எயிநாட்
4. டு ஐ[ங்]குன்றத்து னாட்டுக் காமுண்டன்
5. நான வீரராஜேந்த்ர எயில் நாட்[டு] ராஜன்
6. அடியான் ஈழச்சான்றான் எயிநாட்டுக் கா
7. முண்டன் கலிஞ்சிறை புக்கு காணிக்கும் பூ
8. மிக்குமாகப் பட்டான்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | கிருஷ்ணகிரி | ஆட்சி ஆண்டு | : | 30 |
| வட்டம் | : | கிருஷ்ணகிரி | வரலாற்று ஆண்டு | : | கி.பி. 1048 |
| ஊர் | : | காத்தாடிக்குப்பம | இந்தியக் கல்வெட்டு | | |
| மொழி | : | தமிழ் | ஆண்டு அறிக்கை | : | - |
| எழுத்து | : | தமிழ், கிரந்தமும் | முன் பதிப்பு | : | - |
| அரசு | : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 1 |
| மன்னன் | : | இராஜாதிராஜன் I | | | |

**இடம்:** மாவு அரைக்கும் ஆலையின் எதிரிலுள்ள நடுகல்.

**குறிப்புரை:** கல்வெட்டின் பின்பகுதி சிதைந்துள்ளது. முதலாம் இராஜாதிராஜனின் 30 ஆம் ஆட்சியாண்டில் எயினாட்டு மேலையூரைச் சார்ந்த ஒருவன் தீயில் பாய்ந்து இறந்து பட்டதைக் குறிப்பதாக இருக்கலாம். இந்நடுகல்லில் இவ்வீரன் வழிபாட்டில் அமர்ந்த நிலையில் காணப்படுகிறான். வலப்புறத்தில் நன்கு அலங்கரிக்கப்பட்ட குதிரை ஒன்றும் அதன் அருகில் குடை பிடித்த ஒரு வீரனும் காணப்படுகின்றனர். இடப்புறம் மேலே வின்மகளிர் இறந்த வீரனை அழைத்துச் செல்லும் காட்சி செதுக்கப்பட்டுள்ளது. இந்நடுகல் அமைதியைக் காணும் பொழுது இவன் ஒரு தலைவனாகவோ, குறுநில மன்னனாகவோ இருக்கலாம் எனக் கருதத் தோன்றுகிறது.

**கல்வெட்டு:**

1. ஸ்ரீ பாண்டியன் தலையுஞ் சேரலன் சாலை
2. யும் இரட்டபாடியும் வடதிசைக் கங்கையு
3. [ம் தெ] தன்றிசை இலங்கையு தண்டாற் கொண்ட
4. கோவிராஜகேஸரி பஹராந உடையார் [ஸ்ரீ] ராஜா
5. [யி]ராஜ தேவற்கு யாண்டு ௩ ஆவது [நிகரிலிச்]
6. சோழமண்டலத்து எயினாட்டு [மேலை]
7. யூர் கங்கன் வசவனான ராஜேந்த்ர
8. சோழ சோமீர பி
9. ச்சி பொக்கந் தீய்ப்பாஞ்சான்
10. ... யாந மகத்தின் வெத...
11. ங்கமாதாகந்த...
12. கொண்டான்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | கிருஷ்ணகிரி | ஆட்சி ஆண்டு | : | 2 |
| வட்டம் | : | கிருஷ்ணகிரி | வரலாற்று ஆண்டு | : | கி.பி. 11 ஆம் நூ.ஆ. |
| ஊர் | : | காத்தாடிக்குப்பம் | இந்தியக் கல்வெட்டு | | |
| மொழி | : | தமிழ் | ஆண்டு அறிக்கை | : | - |
| எழுத்து | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| அரசு | : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 2 |
| மன்னன் | : | விஜயராஜேந்திரன் | | | |

இடம்: மாவு அரைக்கும் ஆலையின் நடுகல்

குறிப்புரை: கல்வீடு அமைப்பில் உள்ள நடுகல். வீரன் உருவம் ஒரு கல்லிலும் கல்வெட்டு ஒரு கல்லிலும் உள்ளன. வீரன் இடதுகையில் வில் பிடித்து வலது கையில் வாள் ஏந்தி நிற்கின்றான். மார்பு தொடை ஆகிய பகுதிகளில் அம்புகள் பாய்ந்துள்ளன. கல்வெட்டின் இடப்பகுதி உடைந்துவிட்டது. எழுத்துக்கள் கோடிட்டு எழுதப்பட்டுள்ளன. மேலையூரில் மூக்கானூரு டையார் மருமகன் செட்டிக்கு இந்நடுகல் எடுக்கப்பட்டது எனத் தெரிகிறது. விஜயராஜேந்திரன் முதலாம் இராஜாதிராஜனாவான்

**கல்வெட்டு:**

1. . . . ஸ்ரீ விஜெய ராஜேந்த்ர
2. . . . ற்கி யாண்டிருப . . .
3. . . . விஜெயராஜேந்த்ர மண்ட
4. . . . த்து எயினா[ட்]டு மேலையூ[ர்]
5. . . . கு மூக்கனா [டையார்] மரு
6. . . . ச் செட்டி [பட்டான்]

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | கிருஷ்ணகிரி | ஆட்சி ஆண்டு | : | சக ஆண்டு 1326 |
| வட்டம் | : | கிருஷ்ணகிரி | வரலாற்று ஆண்டு | : | கி.பி. 1404 |
| ஊர் | : | காரக்குப்பம் | இந்தியக் கல்வெட்டு | | |
| மொழி | : | தமிழ் | ஆண்டு அறிக்கை | : | - |
| எழுத்து | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| அரசு | : | விஜயநகரர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 1 |
| மன்னன் | : | ஹரிஹரர் | | | |

இடம்: பாலாற்றின் தென்கரையில் உள்ள ஒரு கொல்லையில் நடப்பட்ட கல்.

குறிப்புரை: கல்வெட்டின் எட்டு வரிகள் மட்டுமே படியெடுக்கப்பட்டது. மீதிப்பகுதி தண்ணிருள் மூழ்கியிருந்ததால் படியெடுக்கப் பெறவில்லை. கல்வெட்டின் மேல் வலப்பகுதியில் சூரிய சந்திர முத்திரைகள் பொறிக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டில் வீரஹரிராயருடைய மகன் ராமச்சந்திர உடையாரின் மஹாப்பிரதானி சோமண்ண உடையார் ஆட்சி குறிப்பிடப்படுகிறது. அங்கண நாட்டுப் பாலசமுத்திரத்தைச் சார்ந்த மதுகரன் என்ற அதிகாரி குறிப்பிடப்படுகிறார்.

**கல்வெட்டு:**

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீ மஹாமண்டலேஸ்வரந் ஹரிராய விஹாட
2. ந ஸ்ரீ ஹரிராய குமார ஸ்ரீராமசந்த்ர உடை
3. யர் மஹாப்ரதானந் ஸோமண்ண உடை
4. யர் ப்ருதிவிராஜ்யம் செய்யா நிந்ற சகாப்தம்
5. ௲௩௱௨௰௬ இதந் மேல் தாரண வருஷம்
6. மகர நாயற்று பூர்வபக்ஷத்து ஸௌம்ய வ்ருஹ
7. ணத்து அங்கணனாட்டு பாலசமுந்
8. திரத்து ஸ்ரீ மதுகரநதிகாரி ராயர் கண் ...
9. . . .

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | கிருஷ்ணகிரி | ஆட்சி ஆண்டு | : | - |
| வட்டம் | : | கிருஷ்ணகிரி | வரலாற்று ஆண்டு | : | கி.பி. 15ஆம் நூ .ஆ |
| ஊர் | : | குட்லட்டி | இந்தியக் கல்வெட்டு | | |
| மொழி | : | தமிழ் | ஆண்டு அறிக்கை | : | - |
| எழுத்து | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| அரசு | : | விஜயநகரர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 1 |
| மன்னன் | : | இம்மடிபுக்கராயன் | | | |

இடம்: பெருமாள் கோயிலின் வடபுறம் மேற்குப் பார்த்து நிற்கும் கல்.

குறிப்புரை: கல்வெட்டு முழுமையாக இல்லை. அங்கணப்பற்று நாட்டு நாயகம் செய்பவராக காமர கேசயப்பாவை இராண்டையின் மகன் குறிக்கப்படுகிறார்.

**கல்வெட்டு:**

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீ மநு மஹா
2. மண்டலெஸ்வரந
3. ஹரிஹரரராயந குமாரந
4. ஸ்ரீ வீர இம்மடிபுக்கரா
5. யந காலத்து ஸ்ரீமுக வ
6. ருஷத்துச் சித்திரை மாதம் ய
7. ரு உ அங்கணப்பற்று நாட்டு
8. நாயகஞ் செய்வார் காமர
9. மிண்டர் கேசயப்பாவை
10. யிராண்டை மகந் வைய்
11. யணந் தாரசாற்றைஏந்
12. . . .

**த.நா.அ.தொல்லியல்துறை** **தொடர் எண் : 122 / 1973**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | கிருஷ்ணகிரி | ஆட்சி ஆண்டு | : | - |
| வட்டம் | : | கிருஷ்ணகிரி | வரலாற்று ஆண்டு | : | கி.பி. 18 ஆம் நூ.ஆ |
| ஊர் | : | குப்பம் | இந்தியக் கல்வெட்டு | | |
| மொழி | : | தமிழ் | ஆண்டு அறிக்கை | : | - |
| எழுத்து | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| அரசு | : | - | ஊர்க் கல்வெட்டு எண் | : | 1 |
| மன்னன் | : | - | | | |

இடம்: தனியார் கொல்லையில் உள்ள பாறை

குறிப்புரை: வராந்த முதலியார் நெல்லூர் இறைவன் கோயிலுக்கு கப்பரைப் பிச்சை நிலமாக கொல்லை நிலம் கொடுத்ததைக் குறிக்கிறது. கப்பரை சிவபெருமான் கையில் இருக்கும் கபாலம் என்ற பிச்சைப் பாத்திரமாகலாம்.

**கல்வெட்டு:**

1. ஸ்வஸ்திஸ்ரீ வராந்த முதலியார் நெல்லூர் தேவர் நயினாற்கு கொறோத
2. ன வருஷ௴ இந்த கொல்லை கப்பரை ஹிஷெ்கெூ குடுத்த தம்மத்தை ம
3. ாற்றினான் [கெங்கை] கரையிற் குராற் பசுவை கொன்றவன் [பாவ]
4. ம் புகுவான்

**த.நா.அ.தொல்லியல்துறை** **தொடர் எண் : 122 / 1974**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | கிருஷ்ணகிரி | ஆட்சி ஆண்டு | : | சகம் 1307 |
| வட்டம் | : | கிருஷ்ணகிரி | வரலாற்று ஆண்டு | : | கி.பி. 1385 |
| ஊர் | : | குருவிநாயனபள்ளி | இந்தியக் கல்வெட்டு | | |
| மொழி | : | தமிழ் | ஆண்டு அறிக்கை | : | - |
| எழுத்து | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| அரசு | : | விஜயநகரர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 1 |
| மன்னன் | : | இம்மடிபுக்கண்ண உடையார் | | | |

இடம்: ஊர் நடுவில் சாலையோரமுள்ள தனியார் கொல்லை வரப்பில் கிடக்கும் கல்.

குறிப்புரை: கல்வெட்டு சிதைந்தும் முற்றுப் பெறாமலும் உள்ளது. தேவராய உடையாரது நன்மைக்காகச் சில நாட்டவர்கள் தலைத்தூக்கினூர் என்ற ஊரினை இறையிலியாக தக்ஷிணாமூர்த்தி பண்டிதற்குக் கொடுத்ததைக் குறிக்கிறது.

**கல்வெட்டு:**

1. ஸ்ரீ ஊ ஊஹெஸ்ர . . .
2. விஹாஉ ஹாஷெக்கு தப்பு . . .
3. யர் மணூ வக ~வுஉ ~தூ ாயிபதி
4. வீர ஹரி [ஹர] வுடையார் குமார இம்ம
5. டி ப ~க்கண்ணவுடையார் வுரயிவி ராஜூம்
6. பண்ணாநின்ற காலத்து ஶகா[ஸூ] ஸ[ஙா]
7. எ மேல் க்ரோயந வருஷத்து ஆவணி மாத[ம்]
8. பௌணுமியும் சனிவாரமும் அவிட்டமும்
9. பெற்ற னாள் ஸ்ரீமன் ஸ்ரீதேவநாராயண...
10. ... ஶக்ஷிணமூ ருஉ . . . வகூ வத்திகள்
11. [ஸ்ரீ]தெ[வ உ]டையார் வாளுக்கும் தோளு
12. க்கும் நன்றாக நிகரிலி சோழ மண்டலத்து
13. அங்கணப்பற்றுத் தலை தூக்கினூர்
14. இதுக் கடைத்த தீத்தமும் நஞ்சை புஞ்
15. சை நாற்பாற்கெல்லையும் கிணோக்
16. கின கிணறும் மேல்னோக்கினம

17. ரமும் .. மர் நிருபப்படிக்கு குடி[கள்]

18. [கா]மிண்டர் மற்றுமுள்ளிட்ட நாட்டவ

19. ரும் ஸவ௲ இறையிலியாக உ௨௱௵வ௲ழ

20. ாக ஊக்ஷிணாமூர்த்தி பண்டிதற்கு விட்டோ

21. ம் யிஞ ஊர் சநா ஜிதூவரை நடக்க கடவ

22. தாகவும் இதுக்கு யிலங்களும் பண்ணினவர்

23. . . .

**த.நா.அ.தொல்லியல்துறை** **தொடர் எண் : 88 / 1973**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | கிருஷ்ணகிரி | ஆட்சி ஆண்டு | : | சக ஆண்டு 1442 |
| வட்டம் | : | கிருஷ்ணகிரி | வரலாற்று ஆண்டு | : | கி.பி. 1520 |
| ஊர் | : | சந்தூர் | இந்தியக் கல்வெட்டு | | |
| மொழி | : | தமிழ் | ஆண்டு அறிக்கை | : | - |
| எழுத்து | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| அரசு | : | விஜயநகரர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 1 |
| மன்னன் | : | வீரப்பிரதாபதேவராயர் | | | |

இடம்: கழனியிலுள்ள தனிக்கல்.

குறிப்புரை: கவுண்டர் செம்பாவை ஈராண்டை மாரப்பன் என்பவர் ஏரியைத் தூரெடுத்துக் (மணவொழுக்கி) கட்டியமைக்காக அவருக்கு அந்த ஏரியின் முதல்மடைப் பாசணத்தில் 500 குழி நிலம் கொடுக்கப்பட்டது. மேலும் இந்த நிலம் தவிர பிற நிலங்களிலிருந்து வரும் கவுண்டு மாணிய வருவாயில் பத்தில் ஒரு பங்கு தரப்பட்டது என்ற செய்தியும் நிலம் 24 அடிக் கோலால் அளக்கப்பட்டது என்ற செய்தியும் இக்கல்வெட்டால் அறியப்படுகின்றன.

**கல்வெட்டு:**

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீ மஹாமண்டலெஸ்வர ஹரி [ய]ரா
2. யரு குமாரன் ஸ்ரீ வீரப்ரதாப தெவராயன்...
3. . . . உடையார் . . .
4. த்தில் ப்ருதிவிராஜ்யம் பண்ணி அருளா நி
5. ன்ற ஸகாப்தம் ௲௪௱௪௰௨ ன் மேற் செல்
6. லா நின்ற சாவ்வரி வருஷம் ஆணி மாதம் ௩ திரு
7. தியையும் [ஆதித்ய]வாரமும் உத்திராட
8. மும் பெற்ற இற்றை நாள் பெருமுத்தப் ப
9. ற்றுப் பெருமுத்தியில் செ . . .
10. ப இராமண்ண உடையர் குமார[ர்]
11. வைச்சண்ணகளும் அரியண்[ண]க்
12. களும் கவுண்டர் செம்பாவையீர
13. ாண்டை மாரப்பனுக்கு குடங்
14. கை மானியத்துக்குச் சாதனம்

15. பண்ணிக் குடுத்தபடி இவர் இந்த

16. ஏறி புதிசாக மணவொழுக்கக் க

**பின்பக்கம்**

17. ட்டுகையால் குடங்கை முதல் மை

18. டயில் இருபத்துனாலடிக் கோலிலே இ

19. வற்கு கட்டுக் குடங்கை செல்லுங் க

20. ழனி குழி ரூா இந்த அஞ்ஞூறு குழி கழ

21. ஙியும் நீக்கி கவுண்டு மாணியமும் பத்தில்

22. ஒன்று செல்லக் கடவதாகவும் இந்த

23. தன் மத்தை மாற்றினவன் கெங்கைக்

24. கரையில் குராற் பசுவைக் கொன்றான்

25. பாவத்திலும் குருவைக் கொன்ற பாவத்தி

26. லும் சிசுவதை செய்த பாவத்திலும் பெண்

27. வதை செய்த பாவத்திலும் பிராமணரைக்

28. கொன்ற பாவத்திலும் போகக் கடவன்

29. இது சந்த்ராதித்தவரை செல்லக் கடவதாகவும்

| | | | | |
|---|---|---|---|---|
| மாவட்டம் | : கிருஷ்ணகிரி | ஆட்சி ஆண்டு | : | 45 |
| வட்டம் | : கிருஷ்ணகிரி | வரலாற்று ஆண்டு | : | கி.பி. 8 ஆம் நூ.ஆ. |
| ஊர் | : சந்தூர் | இந்தியக் கல்வெட்டு | | |
| மொழி | : தமிழ் | ஆண்டு அறிக்கை | : | - |
| எழுத்து | : வட்டெழுத்து | முன் பதிப்பு | : | - |
| அரசு | : கங்கர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 2 |
| மன்னன் | : கட்டாணை பருமர் | | | |

இடம்: வேடர்தட்டக்கல் மலையின் கிழக்குப் பக்கமுள்ள செல்லியம்மன் கோயில் கொட்டாய் கொல்லையில் இருந்த நடுகல். தற்போது தருமபுரி அகழ்வைப்பகத்தில் உள்ளது.

குறிப்புரை: குறிப்புரை: வீரன் தலைக்கு மேல் எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ளன. வலக்கைக் கத்தி புலியின் வாயில் உள்ளது. இடக்கையில் உள்ள குறுவாள் தலைக்கு மேலாக குத்துவதற்குத் தயாராக உள்ளது. புலியும் வீரனை சினத்துடன் எதிர்க்கிறது. கட்டாணை பருமரின் 45ஆவது ஆட்சியாண்டில் பாணரைசர் சேவகன் கட்டியவச்சன் புலியைக் கொன்று தானும் இறந்தான். அவன் நினைவாக நடப்பட்ட நடுகல்.

**கல்வெட்டு:**

1. ஸ்வஸ்திஸ்ரீ கட்டாணை பருமற்கி யாண்டு நாற்பத்தைந்தாவது பெரும்
2. பாணிளவரைசர் வேளால நாடாள பெருமுகை கலியட
3. க்கியார் சேவகன் கட்டிய விச்சன்
4. புலிக் குத்திப் பட்டான்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | கிருஷ்ணகிரி | ஆட்சி ஆண்டு | : | 35 |
